பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**21 05 2026** **6 45**

வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உணவுப் பாதுகாப்பு மற்றும் வறுமை ஒழிப்பில் நீண்டகாலம் பங்களிப்பு செய்ததற்காக உணவு மற்றும் வேளாண் அமைப்பின் உயரிய விருது பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டது.

2. எதிர்காலத்தில் போக்குவரத்திற்கு மின்சார வாகனங்கள் அதிக அளவில் பயன்படுத்தப்படும் என்று மத்திய அமைச்சர் திரு. ஹெச்.டி. குமாரசாமி தெரிவித்துள்ளார்.

3. தமிழக அமைச்சரவை இன்று விரிவாக்கம் செய்யப்படுகிறது.

4. ஈரோடு, திண்டுக்கல் உள்ளிட்ட **5** மாவட்டங்களில் சில பகுதிகளில் இன்று கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி இன்று குஜராத் அணியை எதிர்கொள்கிறது

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

உணவுப் பாதுகாப்பு மற்றும் வறுமை ஒழிப்பில் நீண்டகாலம் பங்களிப்பு செய்ததற்காக உணவு மற்றும் வேளாண் அமைப்பின் உயரிய விருது பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டது.

இத்தாலியின் ரோம் நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் “அக்ரிகோலா” என்ற இவ்விருதை உணவு மற்றும் வேளாண் அமைப்பு தலைமை இயக்குநர் **Qu Dongyu** அவருக்கு வழங்கினார்.

இந்த விருதைப் பெற்றுக்கொண்ட பிரதமர் திரு. நரேந்திர மோடி, தமக்கு கிடைத்த இந்த கௌரவத்தை லட்சக்கணக்கான இந்திய விவசாயிகள், கால்நடை மற்றும் மீன் வளர்ப்போர், வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் தொழிலாளர்களுக்கு அர்ப்பணிப்பதாக கூறினார்.

உணவுப் பாதுகாப்பு, நீடித்த வளர்ச்சி மற்றும் மனித நலனில் இந்தியாவின் பெரும் அர்ப்பணிப்பை இந்த விருது பிரதிபலிப்பதாக தெரிவித்தார்.

உணவுப் பாதுகாப்பு என்பது கொள்கை சார்ந்த அம்சமாக மட்டுமின்றி அது மனித சமூகத்தின் மீதான பொறுப்பு என்றும் அவர் வலியுறுத்தினார்.

இந்தியா ஒரு நீடித்த பருவநிலை மாற்றத்தை தாங்கக்கூடிய மற்றும் எதிர்காலத்திற்கு தயாரான வேளாண் சூழலை உருவாக்கி வருவதாக அவர் கூறினார்.

அதேவேளையில் அறிவியல் வேளாண்மை, நாடு முழுவதும் ஊக்குவிக்கப்பட்டு வருவதாக திரு. மோடி தெரிவித்தார்.

இந்திய வேளாண்மையில் தொழில்நுட்பம் முக்கிய வலிமையை இருப்பதாக அவர் கூறினார்.

அதிக அளவில் உற்பத்தி செய்வது மட்டும் வேளாண்மையின் எதிர்காலமாக அமையாது என்று குறிப்பிட்ட பிரதமர், அது சிறப்பாக உற்பத்தி செய்வதில்தான் அமையும் என்றும் தெரிவித்தார்.

இதற்கிடையே தமது 5 நாடுகள் பயணத்தை நிறைவு செய்த பிரதமர், புதுதில்லி வந்தடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

உணவு மற்றும் வேளாண் அமைப்பின் உயரிய விருது பெற்ற பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு மத்திய அமைச்சர்கள் திரு. அமித் ஷா, திருமதி நிர்மலா சீதாரானம், திரு. பியூஷ் கோயல் ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு. அமித் ஷா, இந்த கௌரவம், விவசாயிகள் மற்றும் வேளாண் துறையுடன் தொடர்புடைய லட்சக்கணக்கான இந்தியர்களுக்கு பெரும என்ற கூறியுள்ளார்.

வேளாண் சீர்திருத்தங்கள், உணவுப் பாதுகாப்பு மற்றும் விவசாயிகள் நலனில் பிரதமரின் அர்ப்பணிப்புக்கு கிடைத்த உலகளாவிய அங்கீகாரம் இது என்று தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் வெளியிட்டுள்ள செய்தியில், பயிர்க் காப்பீட்டுத் திட்டம், விவசாயிகள் கடன் அட்டை திட்டம் உட்பட இந்திய வேளாண் வளர்ச்சிக்கு திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக கூறியுள்ளார்.

வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், உணவுப் பாதுகாப்பு, மக்கள் நல்வாழ்வு மற்றும் நீடித்த வளர்ச்சிக்கான் நாட்டின் உறுதிப்பாட்டை இவ்விருது அங்கீகரிப்பதாக தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நாடு முழுவதும் எதிர்காலத்தில் பயணிகள் மற்றும் சரக்குப் போக்குவரத்தில் மின்சார வாகனங்கள் முக்கிய பங்கு வகிக்கும் என்று

மத்திய கனரக தொழில்துறை அமைச்சர் திரு. ஹெச்.டி. குமாரசாமி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற உயர்மட்டக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்ட அவர், மின்சார பேருந்துகள் மற்றும் மின்சார லாரிகளின் பயன்பாட்டை ஊக்குவிப்பது குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

நாட்டில் மின்சார போக்குவரத்திற்கான மாற்றம் நடைமுறைக்கு ஏற்றதாகவும், வர்த்தக ரீதியாக நீடித்திருப்பதையும் உறுதி செய்வதற்காக அத்துறையை சார்ந்தவர்களுடன் இணைந்து செயல்பட அரசு உறுதிபூண்டுள்ளதாக திரு. எஸ்.டி. குமாரசாமி தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழக அமைச்சரவை இன்று விரிவாக்கம் செய்யப்படுகிறது.

சென்னையில் உள்ள மக்கள் மாளிகையில் காலை 10 மணியளவில் நடைபெறும் நிகழ்ச்சியில் ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் பதவிப்பிரமாணம் செய்து வைக்கிறார்.

இதற்கிடையே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. ராஜேஷ் குமார், திரு. விஸ்வநாதன் ஆகியோர் அமைச்சர்களாக பதவியேற்பார்கள் என்று அக்கட்சி ஏற்கனவே அறிவித்துள்ளது.

அமைச்சரவையில் காங்கிரஸ் கட்சி இடம்பெறுவது மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாக அக்கட்சியின் தமிழக மேலிடப் பொறுப்பாளர் திரு. கிரிஷ் சோடங்கர் தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காங்கிரஸ் கட்சியை சேர்ந்த அமைச்சர்களுக்கு எந்த துறை ஒதுக்கப்பட்டாலும் அதை தாங்கள் ஏற்றுக்கொள்வதாக கூறினார்.

அமைச்சரவையில் காங்கிரஸ் கட்சி இடம்பெறுவது மகிழ்ச்சியளிப்பதாக அக்கட்சியின் மூத்த தலைவர்கள் திரு. ப. சிதம்பரமும், திரு. மாணிக்கம் தாக்கூரும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் அமைச்சரவையில் இடம்பெறுவது குறித்து நிர்வாகிகளுடன் ஆலோசித்து முடிவெடுக்கப்படும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சி தெரிவித்துள்ளது.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியும், தாங்கள் தவெக அமைச்சரவையில் இடம்பெறுவது தொடர்பாக, இன்று நடைபெறும் அரசியல் ஆலோசனைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்படும் என்று கூறியுள்ளது.

<<<<>>>>

கோவை, நீலகிரி, தேனி, திண்டுக்கல் மற்றும் ஈரோடு மாவட்டங்களின் சில பகுதிகளில் இன்று பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தின் மற்ற பகுதிகளில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதியில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் சில பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று தெரிவித்துள்ளது.

தமிழக கடலோரப் பகுதிகள், குமரிக் கடல் மற்றும் மன்னார் வளைகுடா பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 40 கிலோ மீட்டர் முதல் 60 கிலோ மீட்டர் வரை வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் 3 நாட்களுக்கு அப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று வானிலை ஆய்வு மையம் கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

எபோலா வைரஸ் தடுப்பூசி உற்பத்தி செய்வதற்கு 9 மாதங்கள் வரை ஆகும் என்று உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளது.

-------------

சைப்ரஸ் நாட்டு அதிபர் **Nikos Christodoulides** மூன்று நாள் இந்திய பணமாக நேற்று மாலை மும்பை வந்தடைந்தார்.

-------------

மேற்குவங்க மாநிலம் தெற்கு **24** பர்கானாஸ் மாவட்டத்தில் உள்ள ஃபால்டா சட்டப்பேரவை தொகுதியில் மறு வாக்குப்பதிவு இன்று நடைபெறுகிறது.

-------------

இந்தியா-ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையேயான இருதரப்பு வர்த்தகம், **100** பில்லியன் அமெரிக்க டாலரை கடந்துள்ளதாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தெரிவித்துள்ளது.

-------------

ராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் அருகே பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கு லஞ்சம் கேட்டதாக கிராம நிர்வாக அலுவலரை லஞ்ச ஒழிப்பு காவல்துறையினர் கைது செய்தனர்.

-------------

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆட்சியர் திருமதி துர்கா மூர்த்தி பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

-------------

திருவாரூரில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தனியார்துறை சார்பில் நாளை வேலைவாய்ப்பு முகாம் நடைபெறுகிறது.

-------------

மூளைச்சாவு அடைந்த தருமபுரி மாவட்டம் அரூர் கௌாப்பாறையைச் சேர்ந்த இளைஞரின் உடலுறுப்பு தானம் செய்யப்பட்டது.

-------------

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் ஆணையர் டாக்டர் ஜி.எஸ். சமீரன் தலைமையில் நடைபெற்றது.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி இன்று குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

அகமதாபாதில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் கொல்கத்தா அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

முதலில் பேட்செய்த மும்பை அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 147 ரன் எடுத்தது.

148 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிங்கிய கொல்கத்தா அணி, 18 புள்ளி 5 ஓவரில் 6 விக்கெட்டை இழந்து இலக்கை அடைந்தது.

--------------

18 வயதுக்குட்பட்டோருக்கான இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான நான்காவது மற்றும் இறுதி ஹாக்கிப் போட்டி டிராவில் முடிவடைந்தது.

போபாலில் நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் தலா 3 கோல்கள் போட்டன.

இந்திய அணியின் சார்பில் கேப்டன் கேதன் குஷ்வாஹா, கரண் கௌதம், பென் சித்தார்த் ஆகியோர் கோல் அடித்தனர்.

நான்கு போட்டிகளைக் கொண்ட இத்தொடரில் இரு அணிகளும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்றன.

இரண்டு ஆட்டங்கள் டிராவில் முடிவடைந்தன.

------------

ஜெனிவாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யூகி பாம்ப்ரி - நியூசிலாந்தின் மைக்கேல் வீனஸ் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதியில் இந்த இணை, **7-6, 7-5** என்ற செட் கணக்கில் ஸ்விட்சர்லாந்து இணையை வென்றது.

-------------

பெங்களூருவில் நடைபெற்று வரும் சர்வதே டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ஆதில் கபூர் - சசிகுமார் முகுந்த் இயையும், கலியந்தா பூனச்சா - சாகேத் மைனேனி இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.

**<<<<The End>>>>**